

கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க மதுரை வடக்கு மாவட்டம் மேலூர் சட்டமன்ற தொகுதி மேலூரில் மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மாநில இளைஞரணி துணை செயலாளர் இன்பா ஏ.என்.ரகு, ஜி.பி.ராஜா முன்னிலையில் இளைஞர் அணி சார்பில் அமைக்கப்பட்ட கலைஞர் நூலகத்தை திறந்து வைத்தனர். உடன் இளைஞர் அணி அமைப்பாளர் எம்.இளங்கோ, துணை அமைப்பாளர்கள் குமரேசன், பரவை அன்புச்செல்வன், ஐயப்பன், வெற்றிச்செல்வன், மருதுராஜா, வண்ணி முத்துப்பாண்டி, சுதர்சன், கழக நிர்வாகிகள் கரு.தியாகராஜன், ஆனந்த், ஆதிசங்கர் மற்றும் கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள், பொதுமக்கள் பங்கேற்றனர்.

### எம்-சாண்டு, பி-சாண்டு - ஜல்லிக்கு

# ஏற்றப்பட்ட விலையிலிருந்து ரூ.1000 குறைப்பு!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு!

சென்னை, ஏப்.29 -

எம்சாண்டு பி-சாண்டு மற்றும் ஜல்லி ஆகியவற்றிக்கு ஏற்றப்படட விலையிலிருந்து ரூ.1000/ குறைத்து விற்பனை செய்திடவும், சாதாரண கற்கள் மீதான சீனியரேஜ் தொகையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.33/ நிர்ணயித்திடவும் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக் கப்பட்டது.

சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று (27.04.2025) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில், கல்குவாரி, கிரஷர்கள் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கம் 25.04.2025 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ள கோரிக்கைகள் தொடர்பான கூட்டம் நடைபெற்றன.

இக்கூட்டத்தில் மனுவில் குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட்டு கீழ்கண்ட முடிவுகள் எடுக் கப்பட்டது.

இதன்படி, கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கம் எம் சாண்டு பி சாண்டு மற்றும் ஜல்லி ஆகியவற்றிக்கு ஏற்றப்படட விலையிலிருந்து ரூ.1000/ குறைத்து விற்பனை செய்யப்படும் என சங்கத்தினரால் ஏற்கப்பட்டது.

சாதாரண கற்கள் மீதான சீனியரேஜ் தொகையை மெட்ரிக் டன் ஒன்றுக்கு ரூ.33/ என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு அதற்கான அரசாணை ஒரு வார காலத்திற்குள் வெளியிடப்படும்.

இக்கூட்டத்தில், இயற்கை வளங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கே. பணீந்திர ரெட்டி, புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் எ.சரவண வேல்ராஜ், கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.சின்னசாமி, சங்கத்தின் உறுப்பினர்கள், புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் இணை இயக்குநர்கள் மற்றும் துணை இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கெங்கவல்லி தொகுதி

# கோவிந்தம்பாளையத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும்!

## சட்டப்பேரவையில்–அமைச்சர் அர.சக்கரபாணி தகவல்!



சென்னை, ஏப். 29 –

சட்டப்பேரவையில் கெங்கவல்லி தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் எழுப்பிய கேள்வியும், அமைச்சர் அர.சக்கரபாணி அளித்த பதிலும் வருமாறு:–

**அ. நல்லதம்பி:** கெங்கவல்லி தொகுதி, கோவிந்தம்பாளையம் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

**அமைச்சர் அர. சக்கரபாணி:** சேலம் மாவட்டம், கெங்கவல்லி சட்டமன்றத் தொகுதியில் கோவிந்தம்பாளையம் ஊராட்சியில் விரைவில் நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அ.நல்லதம்பி:** சேலம் மாவட்டம், கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட கோவிந்தம்பாளையம் கிராமத்திற்கு நேரடி நெல் கொள்முதல் நிலையம் ஒன்று கேட்டு, கேள்வி கேட்டிருந்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் அங்கு நேரடி கொள்முதல் நிலையம் அமைத்துத் தருகிறேன் என்று சொல்லிவிட்டார். அதற்கு நன்றி.

தமிழ்நாடு முழுவதும் தற்போது சோதனை அடிப்படையில், POS machineகளுடன் கணினி எடை தராசு Bluetooth மூலமாக இணைக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறையால் பொதுமக்கள் கைரேகை வைத்த பின்புதான், அவர்களுக்கான பொருட்களின் அளவை எடை தராசில் வைத்த பிறகு, bill போட்டு பணம் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலை உள்ளதால், ஒரு நாளைக்கு தோராயமாக 25 bill மட்டுமே போடப்படுவதால், காலதாமதம் ஏற்பட்டு, பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் சூழ்நிலை உள்ளது.

**அமைச்சர் அர. சக்கரபாணி:** உறுப்பினர் அவர்கள் கைரேகை வைக்கின்ற காரணத்தினால் பொருட்கள் வாங்குவதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்று இங்கே சொன்னார்கள். ஒன்றிய அரசு இந்தியாவில் இருக்கிற அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் Bio metric கைரேகை கண்டிப்பாக பதிவு செய்து, பொருளை வழங்க வேண்டுமென்று உத்தரவு வழங்கியிருக்கிறது. உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 60% ஆக இருந்தது.

முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதிலிருந்து ஒன்றிய அரசின் வலியுறுத்தலின் காரணமாக, இப்போது 99.60% கைரேகை வைத்துத்தான் பொருள் வாங்கப்படுகிறது. நீங்கள் சொன்னது போன்று கைரேகை பதியவில்லையென்றாலும், கண்கருவிழி மூலமாக iris என்ற முறையிலே பொருளை வாங்குவதற்கு இந்த அரசு அதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறது. உண்மையிலே பல சட்டமன்ற உறுப்பினர்கள் இதுப்பற்றி எங்களிடத்தில் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதை நானும்கூட சமீபத்தில், கீழ்பாக்கம் பகுதியிலே இருக்கின்ற நியாயவிலைக் கடைக்கு சென்று அதை பார்த்தோம். அதனால் சில நேரங்களிலே காலதாமதம் ஏற்படுகிறது.

நகரப்பகுதிகளிலே கட்டுநர் இருக்கிறார்கள். அதனால் பொருட்ளுக்கான அந்த billஐ salesman உடனே போட்டு, கட்டுநர் எடை போட்டு கொடுப்பதினால் பொதுமக்கள் எளிதாக வாங்கிச் சொல்கிறார்கள். கிராமப்பகுதிகளில் அந்த கட்டுநர் இல்லாத காரணத்தினால், பொருளை வாங்குவதற்கு பொதுமக்களுக்கு billயைப் போட்டு, கட்டுநர் இல்லாத காரணத்தால் அவரே சென்று எடைப் போடுவதனால் காலதாமதம் ஏற்படுகிறது.

எனவே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, கண்டிப்பாக வருகின்ற காலத்திலே, பொதுமக்கள் எந்த சிரமமுமின்றி பொருளை வாங்கிச் சொல்வதற்கு, கட்டுநர்களை கிராமப் பகுதிகளில் இருக்கின்ற நியாய விலைக் கடைகளிலே, சுமார் 500 குடும்ப அட்டைகள், 800 குடும்ப அட்டைகளுக்கு மேலிருக்கின்ற கடைகளுக்கு கட்டுநர் நியமிப்ப தற்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், நானும், முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்து சென்று, அந்தக் கட்டுநர் பதவியை நிரப்புவதற்கு வருகின்ற காலத்திலே நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் ஏற்பாடு செய்வோம் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி பதிலளித்தார்.

### மனோ தங்கராஜ் மீண்டும் அமைச்சராக நியமனம்!

# தமிழ்நாடு அமைச்சரவையில் மாற்றம்!

## அமைச்சர்கள் எஸ்.முத்துசாமி – எஸ்.எஸ்.சிவசங்கருக்கு கூடுதல் இலாகா ஒதுக்கீடு!

**சென்னை, ஏப். 29-**

**தமிழ்நாடு அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக மனோ தங்கராஜ் மீண்டும் அமைச்சராக நியமிக்கப் பட்டுள்ளார்.**

இதுகுறித்து ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

பொன்முடி வகித்த வனத்துறை, பால் வளத்துறை அமைச்சர் ராஜகண்ணப்பனுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

செந்தில் பாலாஜி வகித்து வந்த மின்சாரத் துறை, அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கருக்கு கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வி.செந்தில்பாலாஜி கவனித்து வந்த மது விலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை, அமைச்சர் முத்துசாமிக்கு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

பத்மநாபபுரம் எம்.எல்.ஏ., மனோ தங்கராஜ் மீண்டும் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளார். அவருக்கு மீண்டும் பால் வளத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆளுநர் மாளிகையின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க, மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர், மண்டலம் 8ன் பொறுப்பாளர் ஜி.பி. ராஜா வழிகாட்டுதல் படி , புதிதாக பொறுப்பேற்று கொண்ட தேனி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர , பேரூர்க் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் , துணை அமைப்பாளர்கள் அறிமுகம் மற்றும் சமூக வலைதள பயிற்சி கூட்டம் தேனி வடக்கு மாவட்ட கழகச்செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., தலைமையில் நடைபெற்றது.



வேலூர் மாவட்டம், வேலூர் ரங்காபுரத்தில் விஎம்ஆர் நினைவு இல்லம் சங்க அலுவலகம் முதல் தளம் திறப்பு விழா தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி. தலைமையிலும் தொ.மு.ச. பேரவைதலைவர் கி.நடராஜன், பொருளாளர் கோ.சி.வள்ளுவன், வேலூர் மண்டலம் பொதுச்செயலாளர் தா.இரமேஷ், வேலூர் மண்டலம் தலைவர் சே.மணி, ஆகியோர் முன் னிலையிலும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மத்திய சங்க நிர்வாகிகள், இனை செயலாளர்கள் மற்றும் சங்கம் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் நிறைவாக வேலூர் மண்டலம் பொருளாளர் மு.கிருஷ்ணன் நன்றி உரையாற்றினார்.

### நெல்லை மாவட்டம் இராதாபுரம் தொகுதியில் புதிதாக 13 ரேஷன் கடைகள் திறக்க அனுமதி!

# தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அனைத்து ரேஷன் கடைகளுக்கும் கட்டிடம் அமைக்கப்படும்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவிப்பு!



நெல்லை, ஏப். 29 -

நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் புதியதாக 13 ரேஷன் கடைகளை திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் மேலும் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அனைத்து ரேஷன் கடைகளுக்கும் கட்டிடம் அமைத்துக் கொடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.என சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்ற தொகுதியில் ஏற்கனவே 35 க்கும் மேற்பட்ட புதிய கிளை நியாய விலை கடைகளை கடந்த 4 ஆண்டுகளாக அரசிடம் இருந்து அனுமதி பெற்று பேரவை தலைவர் மு.அப்பாவு திறந்து வைத்து, அனைத்து புதிய ரேசன் கடைகளுக்கும் இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டிடம் கட்டி கொடுத்து பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். மேலும் தொகுதி முழுவதும் கூடுதலாக 40 க்கும் மேற்பட்ட கிராமங்களில் புதிதாக கிளை நியாய விலைக் கடை திறக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்.

தற்போது 2024-25 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்வதையடுத்து கடந்த 08.04.2025 அன்று நடைபெற்ற கூட்டுறவு மற்றும் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மானிய கோரிக்கைகளின் மீதான விவாதத்தின் போது கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன்,உணவு மற்றும் பாதுகாப்பு துறை அமைச்சர் சக்கரபாணி ஆகியோர்களிடம் சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு எனக்கும் (இராதாபுரம் தொகுதி) 30க்கும் மேற்பட்ட கிளை நியாய விலை கடைகள் நிலுவையில் உள்ளது. அதனை பெற்றுத் தருமாறு கோரிக்கை வைத்திருந்தார். உடனடியாக அமைச்சர் சக்கரபாணி மக்களுக்காக இறங்கி சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். பேரவை தலைவர் அவர்களின் கோரிக்கையை ஏற்று மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் தொடர்பு கொண்டு தகுதி இருக்கின்ற அனைத்து கிளை நியாய விலை கடைகளும் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் உறுதியளித்தார்.

இதையடுத்து தற்போது புதிதாக 13 கிளை நியாய விலை கடைகளுக்கு அரசிடம் இருந்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.இதில் இராதாபுரம் வட்டம் காவல் கிணறு ஊராட்சி 1)தெற்கு பெருங்குடி பகுதிநேர நியாய விலைக் கடை (சனி), 2)வள்ளியூர் பேரூராட்சி விசுவாசபுரம் பகுதி நேர நியாய விலைக் கடை ( புதன் மற்றும் ஞாயிறு) , 3)ஆனைகுளம் ஊராட்சி வைத்தியலிங்கபுரம் பகுதி நேர நியாய விலைக் கடை (வியாழன் மட்டும்) 4)வள்ளியூர் பேரூராட்சி பூங்கா நகர் பகுதிநேர நியாய விலைக் கடை (ஞாயிறு மட்டும்), 5) வள்ளியூர் பேரூராட்சி ராமகிருஷ்ணா புரம் பகுதி நேர நியாய விலைக் கடை (சனி மட்டும்) , 6) வள்ளியூர் பேரூராட்சி கோட்டையடி பகுதி நேர நியாய விலைக்கடை (வெள்ளி மட்டும்), 7)ராதாபுரம் ஊராட்சி பாப்பான் குளம் கிளை நியாய விலைக் கடை ( வெள்ளி மட்டும் ),8) தெற்கு கருங்குளம் ஊராட்சி பெரியகுளம் பகுதி நேர நியாய விலை கடை ( சனிக் கிழமை மட்டும்), 9)ராதாபுரம் ஊராட்சி பட்டார் குளம் பகுதி நேர நியாய விலைக் கடை ( செவ்வாய் மட்டும்) , 10)வள்ளியூர் பேரூராட்சி சுப்பிர மணியபுரம் பகுதி நேர நியாய விலைக் கடை ( புதன் மட்டும்) , 11) இராதாபுரம் ஊராட்சி பண்ணையார் குளம் பகுதி நேர நியாய விலைக் கடை (சனி மட்டும்) ,12) தெற்கு கள்ளிகுளம் ஊராட்சி பகுதி நேர நியாய விலைக் கடை (புதன் மட்டும்) 13,தெற்கு கள்ளிகுளம் ஊராட்சி நடு ஆறு புளி பகுதி நேர நியாய விலைக் கடை ( புதன் மட்டும்) என மொத்தமாக 13 கிளை நியாய விலைக் கடைகளுக்கு 2604 2025 அன்று அரசாணை எண் 108 ன்படி கூட்டுறவு , உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் அரசாணை வெளியிடப்பட்டு புதிதாக கிளை நியாய விலைக் கடை தொடங்குவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

இதனை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,துணை முதலமைச்சர் அவர்கள், கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன்,உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அமைச்சர் சக்கரபாணி ஆகியோர் வழிகாட்டுதல்படி, சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு வரும் மே மாதத்தில் அனைத்து கிளை நியாய விலைக் கடைகளையும் திறந்து வைக்கிறார்.மேலும் இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அனைத்து கிளை நியாய விலைக் கடைகளுக்கும் கட்டிடம் அமைத்து கொடுப்பதற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### அரசு ஊழியர்களுக்கு அதிரடி அறிவிப்புகளை வெளியிட்ட

# முதலமைச்சருக்கு தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் நன்றி!

## மாநில பொதுச்செயலாளர் நா.சண்முகநாதன் அறிக்கை!



புதுக்கோட்டை, ஏப். 29 -

தமிழ்நாட்டின் முதலமைச்சர் சட்டப்பேரவையில் ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கான 9 அறிவிப்புகளை வெளியிட்டு இருப்பதை தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் பெரிதும் வரவேற்கிறது என தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்கூறியுள்ளதாவது:

எப்பொழுதெல்லாம் ஒன்றிய அரசு அறிவிக்கிறதோ அப்பொழுதெல்லாம் மாநில அரசும் அகவிலைப்படி உயர்வினை அளிக்கும் என்று உறுதி அளித்தபடி ஒன்றிய அரசு அறிவித்த அகவிலைப்படி உயர்வினை 1.1.2025 முதல் முன் தேதியில் வழங்கப்படும் என்ற அறிவிப்பு 16 லட்சம் ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு பயன் தரும் அறிவிப்பாகும்.

கொரோனா காலத்தில் முடக்கப்பட்ட சரண் விடுப்பை பல்வேறு ஆசிரியர் அரசு ஊழியர்களின் கோரிக்கையினை ஏற்று இந்த ஆண்டே வழங்கப்படும் என்ற அறிவிப்பு 8 லட்சம் ஆசிரியர் அரசு ஊழியர்கள் பயன்பெறும் அறிவிப்பாகும்.

மிக முக்கியமாக பழைய ஓய்வு திட்டத்திற்காக அமைக்கப்பட்ட குழுவின் கால அளவை குறைத்து செப்டம்பர் மாதத்திற்குள் அதன் அறிக்கை பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அறிவிப்பு பங்கேற்பு ஓய்வு திட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ளது.

ஆசிரியர் அரசு ஊழியர்களின் குழந்தைகளின் உயர்கல்வி படிப்பிற்கான தொகையினை ரூ 1 இலட்சமாக உயர்த்தி வழங்கி இருப்பதும்,

திருமண முன்பணத் தொகை ரூ 5 இலட்சமாக உயர்த்தி வழங்கி இருப்பதும் பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

கலைஞர் அவர்கள் உலகத் தமிழ் சமுதாயத்திற்கும் ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கும் அவர் செய்த சாதனைகள் சொல்ல முடியாத அளவிற்கு சிகரம் தொட்டவையாகும்.அதே போல்

தமிழ்நாடு முதலமைச்சரும் தன் வாழ்நாளில் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிய முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் வழியில் ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு அரணாகவும் அவர்களின் நலனில் அக்கறையோடும் செயல்பட இருப்பதாக முதலமைச்சர் அறிவித்திருப்பதை ஒட்டுமொத்த ஆசிரியர் சமுதாயம் வரவேற்கிறது.

குறிப்பாக ஆசிரியர் அரசு ஊழியர்களுக்கு பறிக்கப்பட்ட அனைத்து உரிமைகளையும் , இடைநிலை ஆசிரியர்களுடைய, ஊதிய முரண்பாடு, ஊக்க ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளையும் தமிழ்நாடு முதலமைச்சர் வழங்குவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது என நா. சண்முகநாதன் தனது அறிக்கையில் தெரிவித்து உள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஒன்றியம், கடத்தூர் கிராமத்தில் வசித்து வந்த இளங்கோவன் தகப்பனாரும், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியரும், கிளை கழக செயலாளருமான ஐயா மா.அன்பரசு மறைவெய்தியதை அறிந்து வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் நேரில் சென்று ஐயாவின் உடலுக்கு கழக கொடி போர்த்தி மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார், இதில் மாநில மகளிரணி துணைச் செயலாளர் ஆ. அங்கையற்கண்ணி அன்புமணிமாறன், வடக்கனந்தல் ஜெயவேல், ப.ஆனந்த் (எ) இளஞ்செழியன், மருத்துவர் பர்னாலா உதயசூரியன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்துகொண்டு இறுதி அஞ்சலியும் செலுத்தினார்கள்.